# மூலர் அருளிய மூச்சறிவியல்

**முனைவர் ச.பிரியதர்சினி**

**இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,**

**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,**

**கோயம்புத்தூர் - 43**

Priyadharshini_tam@avinuty.ac.in

ORCid: https://orcid.org/0009-0009-1121-5502

56

**ஆய்வுச்சுருக்கம்**

மெய்யியல் கவிஞர்கள் பதினெண்மரைச் சித்தர்கள் என்றும் அவர்களுடைய தத்துவ ஞானமும் உலகியல் அறிவும் ஒன்று கலந்த பாடல் தொகுதியைச் சித்தர் இலக்கியம் என்று அழைக்கிறோம். சித்தர் இலக்கியம் உயர் வர்க்க வேத மரபுக்கு எதிராக இயங்கிய ஒரு மறுப்பு இயக்கத்தின் விளைவு என்று குறிப்பிடலாம். சடங்குகள், சம்பிரதாயங்கள் சமூக ஏற்றத்தாழ்வு ஆகியவற்றுக்கு எதிரான கடும் விமர்சனத்தை முன் வைத்தவர்கள் சித்தர்கள். அதேசமயம் சொந்த மெய்யியல் அனுபவங்களையும் முன்வைத்தவர்கள் சித்தர்கள் என்று கூறுதல் பொருந்தும். சித்தர்களுள் திருமூலர் கி.பி ஏழாம் நூற்றாண்டு அல்லது அதற்குச் சற்று முற்பட்ட காலத்தை சேர்ந்தவர்.

சித்தர்களின் வாழ்க்கை வரலாற்றுச் செய்திகளாகக் கிடைப்பன மிகவும் குறைவு. யோக சக்தியாகிய சித்திகளில் வல்லவர்கள் என இவர்களை குறிப்பிடலாம். மனித குலம் இதுவரை கண்டறிந்த மானுட ஆற்றல்களில் தலையாயது என கருதப்படும் அஷ்டமா சித்தி அதாவது என் வகைச் சித்துக்கள் கைவரப்பெற்றவர்கள் சித்தர்கள் என்பர்.

**திறவுச்சொற்கள்**

யோகம் - பூரகம் - கும்பம் - இரேசகம் - உயிர்க் காற்று

**முன்னுரை**

சித்தர் இலக்கியம் என அறியப்படும் பாடல்கள் பெரிதும் மனித வாழ்வின் நிலையற்ற தன்மையையும், உலகில் மாந்தர் உண்மை அறியாது துன்புறும் இயல்பையும் எடுத்துக்காட்டி மனதையும் உடலையும் கூர்மையும் வளமையும் உடையதாக யோகா பயிற்சியால் மாற்றலாம் என விளக்கும் தன்மையன.

சடங்கு சம்பிரதாயங்களுக்கு ஆலயம் பூசை ஆகியவற்றுக்கே சித்தர் பாடல்கள் முக்கியத்துவம் தருவது இல்லை.

பக்தி இயக்கம் தோற்றுவித்த கிளர்ச்சி அனுபவங்கள் பக்தி, சமயம் இறுக்கமான நிறுவனமாக மாறிய சூழலில் மெய்யுணர்வில் திழைத்த சித்தர்கள் அந்த இறுக்கத்தை உடைக்கும் சிந்தனைப் புரட்சியாளர்களாக உருவானார்கள் என்று கருத இடம் உண்டு. பகுத்தறிவு, புரட்சி,

மறுப்பு என்ற ஒரு புது மொழியில் அவர்கள் பேசினார்கள்.

சித்தர்கள் பக்தி இலக்கிய காலத்துக்கு முற்பட்டவர்களாகவும் இருந்தார்கள். திருமூலரைப் போல சங்க இலக்கிய காலத்திலும் கூட வியப்பொரு சித்திகளில் வல்லவர்களாக இருந்தார்கள் என்பதைக் குறுந்தொகைப் பாடல் ஒன்று

**நிலம் தொட்டுப் புகாஅர் வானம் ஏறார்**
**விலங்கிரு முந்நீர் காலில் செல்லார்**

(குறுந்.130:1-2)

நிலம் அகழ்ந்து கீழே செல்லவும், வானில் பறக்கவும் நீரின் மீது காலால் நடக்கவும் வல்லவர் என்பதை குறுந்தொகைப் பாடலால் அறியலாம்.

**சித்தர்**

- மனம் சிந்தை அல்லது சித்தம் என அறியப்படுகிறது. அலைபாயும் சித்தத்தை அடக்கி ஆண்டவன் சித்தன். அவனுடைய ஆற்றல் நிலை சித்து என அழைக்கப்படுகிறது.
- சித்தி என்றால் வேறு அல்லது எய்துதல் என்று பொருள். எட்டு வகைச் சித்திகளான அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராத்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் ஆகியவற்றை எய்தியவர்கள் சித்தர்கள்.
- இறைவனை சத்-சித்-ஆனந்தம் இன்று குறிப்பர். பேருண்மையும் பேரறிவும் பேரானந்தமும் என இவை மூனறாகும். இவற்றுள் நடுவில் உள்ள பேரறிவால் சித்தால் மற்ற இரு நிலைகளையும் எய்தவல்லவர் சித்தர் என அழைக்கப்படுகின்றனர்.
- திருமூலர் தன் பாடல் ஒன்றில் சிவ சித்தர் என்ற சொல்லைக் கையாளுகிறார். இறைவனை அடையும் படிநிலைகளாக சாலோகம் சாமிபம் சாரூபம் சாயுச்சியம் என நான்கினை குறிப்பர். முதல் மூன்றும் பத முத்தி எனப்படும். அந்நெறியை நாடாது சாயுச்சியம் என்ற பரமுத்தியையே நாடுபவர் சிவ சித்தர்.

**பத முத்தி மூன்றும் பழுதென்று கைவிட்டு**
**இதமுற்ற பாச இருளைத் தந்து**
**மதமற்று எனது யான் மாற்றி விட்டாங்கே**
**தித முற்றவர்கள் சிவ சித்தர் தாமே**

என்ற திருமூலர் வரையறைப்படி அமைந்தவர் சித்தர் ஆவார். இவ்வாறு சித்தர் என்ற சொல்லின் பொருளை அறியலாம். யோக சித்திகளில் வல்லவராய் விளங்கி பன்முக ஞானம் கைவரப் பெற்றவர்களாக சித்தர்கள் விளங்கினார்கள் என்று பொதுவாகக் கருதலாம்.

**யோகச் சமாதியின் உள்ளே அகலிடம்**
**யோகச் சமாதியின் உள்ளே உள ஒளி**
**யோகச் சமாதியின் உள்ளே உள சக்தி**
**யோகச் சமாதி உகந்தவர் சித்தரே** (திருமந்.1490)

இன்னும் திருமூலரின் திருமந்திரம் ஒரு தெளிவான முடிவுக்கு வர உதவுகிறது. அழியும் உடம்பிலிருந்து பேராற்றலைப் பிறப்பிக்க வல்லவர்களே சித்தர்கள்.

சித்தர்களின் ஞானப்பார்வையில் உலக நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமைகளுக்கு நடுவே மானுட உடம்பில் மகத்தான சக்திகளைக் காண இயலும் என்பதே சித்தர் பாடல்களின் அடித்தளம் ஆகும்.

மெய்ந்நாட்டமும் மக்களைப் பற்றிய அக்கறையும் என்னும் இரு எல்லைகள் நடுவே செயல்பட்ட பெரியார்கள் பல நாடுகளிலும் பல சமயங்களிலும் இருந்துள்ளனர். குறிப்பாக இஸ்லாமிய சமயத்தில் சூபிகளை சித்தர்களுக்கு இணையானவர்களாக கூறலாம். கிறிஸ்தவத்திலும் அத்தகு ஞானிகள் புனித அகஸ்டின் போன்ற அறிஞர்கள் சித்தர் நெறிக்கு அணுக்கமானவர்களாக காட்சி தருகின்றனர். சமண சமயத்து சாரணர்களும் புத்தத் துறவிகளும் சித்தர்களின்; மனநிலையையும் சாதனைகளையும் கொண்டவர்கள் ஆவர்.

**சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே**

**சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச்சண்டையிலே**
**ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்**

**அலைந்து அலைந்து வீணே நீர் அழிதல் அழகல்லவே**

என்ற வள்ளலார் கருத்தின் சாரமே சித்தர்களின் தத்துவப் போக்காக மிளிர்கிறது. மேலும் உலகின் பல சமயங்களிலும் ஓர் உயர்ந்த தத்துவ தளத்தில் சித்தர்கள் இயங்கியிருப்பதை அறியலாம்.

**யோகநெறி**

ஆன்மீக அனுபவங்களை அடையும் நெறிகளில் முதன்மையானவை பக்தி நெறியும் யோக நெறியும். சித்தர்களை பொறுத்தவரை அவர்கள் யோக நெறி நின்றவர்கள்.

**எட்டாகிய சித்தி ஓர் எட்டு யோகத்தால்** (திருமந்.1310:1)

என்னும் திருமூலர் வாக்கு சித்திகள் எட்டு என்பதையும் யோகநெறி எட்டு என்பதையும் உணர்த்தும். இதனையே அஷ்டாங்க யோகம் என்று யோக மார்க்கத்தவர் குறிப்பிடுவர்.

கயிலாயத் தொரு சித்தராக இருந்த சிவ யோக்கியர் ஒருவர் தென் திசை நோக்கி வந்தார். திருவாடுதுறையில் மாடு மேய்க்கும் மூலன் இறந்து கிடக்கப் பசுக்கள் படும் துயர் கண்டு 'பரகாயப் பிரவேசம்' மூலம் அவனுடலில் புகுந்தார். பின்னர் தன் உடல் காண படாமையில் திருமூலராக வாழ்ந்தார் என்பது கதை. எனினும் இவர் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து ஆண்டுக்கு ஒரு பாடல் உரைத்தார் என்று கதை விரிகிறது. மூலம் உரைத்த 3000 தமிழ் என்ற திருமூலர் கூற்றிலிருந்து இக்கதை பிறந்திருக்கலாம். இவர் நூல் 9 தந்திரங்களாகப் பிரிக்கப்பட்டு 3000 துக்கு மேற்பட்ட பாடல்கள் கொண்டது. திருமந்திரம் என்று இதற்கு பெயரிடப்பட்டுள்ளது. யோக தத்துவங்கள், சிவாகமக் கோட்பாடுகள் ஆகியவற்றுடன் வாழ்வின் நிலையாமையையும் எடுத்துரைக்கிறது இந்நூல்.

சிவப்பொருளை உள்ளீடாகக் கொண்டு உறுதிப்பொருளுரைக்கும் மெய்யாற்றுப்படை

இதுவென்று சைவத்தமிழர்களால் பேசப்படுவது. தலைமுறைகளால் பேணப்படுவது திருமந்திரம்.

எல்லா உடம்புக்குள்ளும் உறைவது இறை என்று நம்பப்படுவதன் இன்னொரு கோட்பாடு தான் ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற உலகப் பெருங்கருத்தை முன்வைக்க செய்தது மூலரை. சாதி பேதம், இன பேதம், மத பேதம், வர்க்க வேதம் என்ற அனைத்து பேதங்களையும் அளிக்க முற்படும் ஆயுதம் இன்றே கருத வேண்டும் இந்த கருத்தாடலை உடலை இறையோடு பொருந்திய இந்த உயிரக்; கொள்கை தான் இழித்துச் சொல்லப்பட்ட உடல் என்ற பொருளை மதித்து பேசும் மாண்பு கொடுத்தது.

யாக்கை நிலையாமை பேசிய போதிலும் மானுட உடல் அறிய கொடையாக கிடைத்தது என்று கருதினார். இந்த உடம்பின் மூலம் சாதனைகள் புரிய முடியுமே என்று கருத்துரைத்தார்.

**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே** (திருமந்.724:4)

இன்று உரைக்கும் திருமூலர் இந்த உடம்பை முறையாகப் பராமரித்தால் இதுவே ஆலயமும் ஆகும் என்று உணர்த்தினார்.

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**
**வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்**
**தௌ;ளத் தெளிந்தாருக்குச் சிவன் சிவலிங்கம்**
**கள்ள புலனைந்தும் காலா மணி விளக்கே**
(திருமந்.1823)

என்பது திருமூலர் வாக்கு. சித்தர் பெருமக்களுள் தனிப் பெருமை வாய்ந்த திருமூலர் தம் தத்துவங்களாலும் ஆகம கருத்துக்களாலும் அழியாச் சிறப்புக்கு உரியவர் ஆகிறார். மேலும்

**உடம்பினை முன்னம் இழுக்கு என்று இருந்தேன்**
**உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புள்ளே உத்தமன் கோயில் கொண்டான் என்று**
**உடம்பினை, யான் இருந்து ஓம்புகின்றேனே**
(திருமந்.725)

இந்தக் கருத்து தமிழுக்கு புதுவது. 'காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்த பையடா' என்று சிரித்துக் கொள்ளாமலும் பட்டினத்தடிகள் போல் இது 'சலமலப் பேழை' என்று சலித்துக் கொள்ளாமலும், உடம்பு ஒரு கோயில் என்று உரக்கச் சொன்ன திருமூலர் உபநிடதங்களின் உயிர் அழிவதில்லை என்ற பழைய வாதத்தையும் களைந்தெறிகிறார்.

உடல் அறிவு குறித்த பௌதிகக் கதவை திருமந்திரமே முதலில் திறக்கிறது. முதன்முதலில் மூச்சறிவியல் பேசப்படுவதும் திருமந்திரத்தில் தான். எலும்புகள் நிறுத்தி, நரம்புகள் பொருத்தி, இறைச்சியை இருத்தி, உறுப்புகள் மலர்த்தி, உயிர்த்திரி கொளுத்தி உலவ விடப்பட்ட இந்த

உடலுக்கு நாடிகள் மொத்தம் பத்து என்று கணித்தார்கள் ஞானச் சித்தர்கள். அவற்றுள் முக்கியமானவை மூன்றென்றும் முடிவு கட்டினார்கள்.

நீர்வழிப்பட்ட சிலேட்டுமம், தீ வழிபட்ட பித்தம், வாயு வழிபட்ட வாதம் இம்மூன்றுமே உடல் என்ற எந்திரத்தின் எரிபொருட்கள் என்று கண்டார்கள். தசை நார்களை இளக்கம் செய்வதும், எப்போதும் இயங்கும் இதயத்தின் சூடு தணிவிப்பதும், நாவின் ஈரம் காப்பதும், உதிர ஓட்டத்தை ஒழுங்குறுத்துவதும், மூட்டுகள் தேயாமல் காத்தலும் சிலேட்டுமத்தின் செம்பணிகள். உணவை எரித்தலும், அறிவும் நினைவும் அழியாமல் காத்தலும், குருதிக்கு நிறமூட்டலும் தோலின் பளபளப்பை பாதுகாத்தலும் பித்தத்தின் பெரும்பணிகள்.

மூச்சினைச் சீர் செய்தலும், உயிருக்கு உயிர்ப்பூட்டலும், மனமொழிமைகளை நேர் செய்து சீர் செய்தலும் தாதுக்களை உண்டாக்கலும், கழிவுகள் புறந்தள்ளலும், வாதத்தின் அரும் பணிகள்.

நீரின்றியும் நெருப்பின்றியும் இவ்வுடல் சில நாட்கள் வாழ்வது சாத்தியம் எனினும் காற்று இன்றி சின்னேரம் வாழ்வதும் சிரமம். அந்த காற்றுக்கும் உடலுக்குமான தொடர்பை தமிழ் குலத்துக்கு முதலில் சொன்ன பேரறிஞன் மூலனே.

**ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்**
**காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை**
**காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளர்க்கு**
**கூற்றை உதைக்கும் குன்றியது வாமே**

(திருமந்.571)

என்பது திருமந்திரம். காற்றைப்பிடிக்கும் கணக்கு அதுதான் மூலர் அருளிய மூச்சறிவியல் ஆகும்.

இந்தக் காற்று தான் நுரையீரல் சென்று உயிர்வளி, நைட்ரஜன், ஹைட்ரஜன், உயிர் ஆற்றல் எல்லாவற்றையும் உதிர ஓட்டத்தில் கலக்கிறது. உதிர ஓட்டத்தின் மூலம் அவை செல்களுக்கு பரிமாற்றப்படுகின்றன. அவற்றின் கழிவுகள் மீண்டும் உதிரத்தில் கலக்கின்றன. அந்தக் கழிவுகளை எல்லாம் நாம் விடும் வெளிமூச்சு தான் வெளியேற்றுகிறது. உட் சுவாசம் உணவு, வெளிச் சுவாசம் கழிவு ஆகும்.

உயிரின் இயக்கம் காற்று தான். சொல்லப் போனால் உயிரே காற்று தான். அந்த காற்றை இழுத்தல் இருத்தல் வெளியிடுதல் மூன்றுக்கும் ஒரு கணக்கு இருக்கிறது என்று கண்டார் திருமூலர். அந்தக் காற்றைப் பிடிக்கும் கணக்கை அவர் வழியில் பார்க்கலாம்.

முன் வழிகளில் வினைப் படுகிறது மூச்சு. பூரகம், கும்பகம், மற்றும் இரேசகம். பூரகம் என்பது காற்றை இழுத்தல். கும்பகம் என்பது உள்ளே இருத்துதல். இரேசகம் என்பது வெளியே விடுதல். இந்தப் பூரகம், கும்பகம், இரேசகம் மூன்றுக்குமான கால அளவே காற்றைப் பிடிக்கும் கணக்கு ஆகும். 16நொடி மூச்சை உள்ளிழுத்து, 64நொடி அதை உள்ளே இருத்தி, 32 நொடி மூச்சை வெளியிட்டால் மட்டுமே சித்தர்கள் கண்டறிந்தபடி 72,000 நரம்புகளுக்கும் உயிர்ச்சத்து ஓடி

உட்சேரும் என்பது திருமூலர் கணக்கு.

**ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்**
**ஆறுதல் கும்பம் அறுபத்து நாலதில்**
**ஊறுதல் முப்பத்திரண்டு இரேசகம்**
**மாறுதல் ஒன்றின்கண் வஞ்சக மாமே** (திருமந்.568)

என்பதே காற்றைப் பிடிக்கும் கணக்கு.

**நிறைவாக**

அறிவியல் வழிப்பட்ட திருமூலரின் திருச்சொல் வழி அறம் புரிந்து, அன்பு கொண்டு, உடல் பேணி, உயிர் வளர்ப்பவர்களாய் மாற்றம் பெறுவோம். திருமந்திரத்தின் நறுமந்திரத்தை ஓதி ஓதி உள்வாங்குவோம். அறிவியல் வழிப்பட்ட திருமூலரின் திருச்சொல் வழி அறம் புரிந்து, அன்பு கொண்டு, உடல் பேணி, உயிர் வளர்ப்பவர்களாய் மாற்றம் பெறுவோம்.

**துணைநூற்பட்டியல்**


1. சாமி.சிதம்பரனார், சித்தர்கள் கண்ட விஞ்ஞானம் தத்துவம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை 08
2. பி.என்.பரசுராமன், சித்தர்கள் வாழ்க்கை, ஆனந்த விகடன் பிரசுரம், சென்னை.
3. மாணிக்கம், பன்னிருதிருமுறைகள், திருமந்திரம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை
4. மது.ச.விமலானந்தம், தமிழ் இலக்கிய வரலாறு, முல்லை நிலையம், சென்னை.2021